# ஆய்வுக் களஞ்சியம்




பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | செல்வி ம.காயத்ரி |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர் |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட், 2018 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை,<br>நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,<br>பொள்ளாச்சி. |
| அச்சாக்கம் | : | அறம் பதிப்பகம்,<br>ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.<br>arampathippakam@gmail.com |

**ISBN: 978-93-86770-84-4**

| | | |
|---|---|---|
| Editor's | : | Selvi M.Gayathri |
| Copyright's | : | Editor |
| First Edition | : | August- 2018 |
| Published | : | Department of Tamil,<br>N.G.M. College, Pollachi. |
| Printing at | : | **Aram Book House,**<br>7A,Veerabhatra 2nd Street,<br>Sathy Road, Erode-3.<br>77088-21464, 85084-84583.<br>arampathippakam@gmail.com |
| Pages | : | 118+14=132 |
| Price | : | 100/- |

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூரியா.ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

18. கா.புவனேஸ்வரி - சங்க கால உணவு முறைகள்
19. அ.மகபூபு - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் 86
20. மகேஸ்வரி - சிறுகதை இலக்கியம் 91
21. து.விசாலாட்சி - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை 95
22. ஜெ. வினோதினி - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை 99
23. வேணுகோபால் - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் 104
24. நா.ஸ்ரீ பிரியா - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் 107
25. ஷரிமளாதேவி - காட்டுப் பூக்களின் கானங்கள் 111

115

# நற்றிணையில் பழக்க வழக்கங்கள்

நா.ஸ்ரீ பிரியா,
ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் என்று கூறப்படுகின்றன. அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர். பழக்க வழக்கங்கள் காலப்போக்கில் சீரிய சிந்தனை, அறிவியல் கருவி ஆகியவை காரணமாகக் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும்பொழுது அவை சடங்காக மாறுகின்றன. சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட தெளிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனி மனிதனுடைய இல்லாமல் சடங்குகளிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் காண முடிகிறது. இவ்வாறான பழக்கவழக்கங்கள் நற்றிணையில் வெளிப்படுவது குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

**நம்பிக்கைகளும் பழக்கங்களும்**

பழங்காலம் முதல் மக்களிடையே நம்பிக்கைகள் போற்றப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் தோன்றும் பழக்கங்கள் மக்களிடையே நிலைத்து நிற்கக்கூடிய வழக்கங்களாக மாறி காலத்திற்கு ஏற்ப மாறி பின் நம்பிக்கைகளாக மக்களிடையே நிலைத்து நிற்கின்றன. நிமித்தம் பார்த்தல் இவ்வகையில் அமைந்த நம்பிக்கை ஆகும். ஆரம்பகாலத்தில் ஒரு செயலை செய்யும் முன் தற்செயலாகப் பார்த்து அல்லது கேட்ட செய்தியின் காரணமாக நன்மை ஏற்பட்டது. ஆகையால் மீண்டும் ஒரு செயலைச் செய்வதற்கு முன் அதே போன்ற செய்திகளை காணவும் பார்க்கவும் மனித மனம் எதிர்பார்க்கின்றது. பின் முன்பு கண்ட அல்லது கேட்ட நன்மை தருவதாக இருக்கும். பார்க்கும் போது எல்லாம் நன்மை நடக்கும் என்ற எண்ணம் மனதில் தோன்றுகிறது. அவ்வகையில் ஆயர் வாழ்வில் பல நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் இருந்தன.

“கொடுங்கோற் கோவலர் குழலொடு ஒன்றே”
- (நற். 69, வ.8).

ஆயர்கள் குழல் ஓசை கேட்டலை ஒரு நல் நிமித்தமாகக் கொண்டிருந்தனர். மணிமாலை அணிந்த குழலினை ஊதும் ஒலியைக் கேட்டல் நல் நிமித்தமாக கூறப்பட்டது.

"எண்ணுமறை இடத்தினும் வலத்தினும் துடித்தன"

(சிலம்புவ.239 இந்திரவிழா).

என்ற வரி மூலம் சிலப்பதிகாரத்திலும் நம்பிக்கை குறித்துக் காண முடிகிறது. பெண்களின் இடக்கண் துடிப்பது நன்மை என்றும் வலக்கண் துடிப்பது தீமை என்ற நம்பிக்கையும் இருந்ததை சிலப்பதிகாரம் காட்டுகிறது.

சமுதாய அமைப்பு ஒழுக்கத்தைப் பின்பற்றியதாகவே இருக்கிறது. தனிமனித வாழ்வியலும் ஒழுக்கத்துடனே இருக்க வேண்டும். அப்படி ஒழுக்கத்திற்கேற்ற கல்வி தனிமனித சமுதாய ஒழுக்கத்திற்கான அறக்கருத்துக்களைக் கூறுகிறது.

"உயிர் செலத் துணைதரும் மாலை
செயிர் தீர் மாரியோடு ஒருங்க தலைவரினே"

- (நற் 364 வ.11-12).

லைவனை நினைத்து வருந்தும் தன்மையை தலைவியின் நிலையையும், மனித வாழ்வியலையும் நற்றிணை மூலம் அறிய முடிகிறது.

**அறிவும் உணர்வும்**

மனித வாழ்க்கையை இயக்குவது அறிவும் உணர்ச்சியும், மனித வாழ்க்கை உணர்ச்சியால் அலைக்கழிக்கப்படுகிறது. அறிவால் அமைதிப்படுத்தப் பெறுகிறது. இது உலகம் முழுவதும் உள்ள மனிதற்குப் பொருந்தும். ஒரு தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்றுள்ளான். தன் காதலின் மேல் உள்ள எண்ணம் அதிகமாக அவள் பிரிவுத்துன்பத்தைப் போக்க வேண்டும் என்பதற்காக அவன் நெஞ்சு உணர்ச்சி நிலையில் எடுத்த பணியை விடுத்து திரும்பி விடலாம் என்று கூறுகிறாள். தலைவனின் அறிவு எடுத்த செயலை முடித்து திரும்புவது தனிச்சிறப்பு ஆகும். பொருத்தமானது என்று கூறப்படுகிறது. ஒரு பக்கம் உணர்ச்சி வயப்பட்ட யானை காதலி பக்கம் இழுக்கிறது. மறுபக்கம் அறிவாகிய யானை செயலற்றுச் சொல்கிறது இடையில் தேய்ந்த கயிறு போல் இவள் உடல் நெஞ்சுக்கும் அதாவது உணர்ச்சிக்கும் ஏற்படும் போராட்டத்தைப்பற்றி அறிய முடிகிறது. "தேய்புரிப் பழங்கயிறு போல்'' என்ற உவமைத் தொடரை வைத்தே அறிந்து கொள்ள முடிகின்றது.

"புறம்தாழ்வு இருண்ட கூந்தல் போதின்
நிறம் பெறும் ஈறிதழ் பொலிந்த உண்கண்
உள்ளம் பிணிக்கொண்டாள் உயின் நெஞ்சும்
செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும்

"செய்வினை முடியாது [illegible]"

- (நற் - 284 வ 1-5).

இதுபோன்று உலகப்பொது வாழ்வியல் சிந்தனைகளைச் சங்க இலக்கியப் பாடல்கள் தருவதால் தான் அவை செவ்வியல் இலக்கியம் என்று தெளிவாக அறிய முடிகிறது.

**குடும்ப வாழ்வு**

ஒரு மனிதனின் ஆளுமைப் பண்பு அவன் பிறந்து வளர்ந்த பாரம்பரியத்தைப் பொறுத்து அமையக் கூடியது. குடும்பத்தில் தந்தையிடம் இருந்து மகனும் மகனிடம் இருந்து அவனுடைய மகனுக்கும் செல்லக்கூடிய அறிவு பண்பு ஆகியவற்றைக் குறிப்பதாகும் அதற்கு ஒரு சான்றைப் பார்ப்போம்.

"ஆதிபோகிய அசைவுஇல் நோன் தாள்"

- (நற்.81 வ.2).

அவனவனுக்கு தேவையான குடும்ப வாழ்வும் பாரம்பரியமும், பண்பாடும், பழக்கவழக்கங்களும் ஒருவரை விட்டு இன்னொருவரிடம் மாறுவதாக அமைந்துள்ளது.

"புண்கண் மாலையும் புலமும் முந்நூறுத்தே"

- (நற்.89 வ.11).

தனிமையில் வாடும் தலைவியின் நிலையை சமுதாயத்தோடு சேர்த்து விளக்கப்பட்டுள்ளது. பிரிந்த தலைவன் பல நாளாக வரவில்லை. வருவான் என்று பார்த்துப் பார்த்துக் கண் சோர்ந்தது. தோள்கள் சுருங்கியது. அறிவு குறைந்தது இப்படி ஒவ்வொரு பிரச்சினையாக வந்து நோய் தீர்ந்தது. இந்த நிலைக்குத் தோழி வருத்தப்படாமல் தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். இறப்பு, பிறப்பு எதற்கும் பயப்படவில்லை. இரண்டையும் ஏற்றுக்கொள்கிறாள் இப்படிப்பட்ட காதலனுக்கு மீண்டும் மனைவியாகாத பிறப்பு வரக்கூடாது என்று நினைக்கிறாள். மாறினாலும் அவன் கணவன், மனைவி என்ற உறவும் நிலை மாறாது என்று தலைவி விரும்புகிறாள். இவ்வாறு நற்றிணை மூலமாக பெண்ணுலகத்தின் சிறப்பையும், பெருமையையும் காட்டுகிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**ஆண்களின் பழக்கம்**

பண்டைத் தமிழர்கள் பலதார மணம் புரிந்து வந்தனர். கணவன், கணிகையர் வீட்டுக்குச் சென்று வந்ததை அறிந்தால் காதலி வருந்துவாள். ஊடல் கொள்வாள். ஆண்களுக்கு இப்படி தவறு செய்யும் உரிமை இருந்த காலத்தில் கூட அவர்களில் பலர் கட்டிய மனைவியர்களிடம் காதலும், கண்டிப்பும் உடையவர்களாகவே நடந்துகொண்டனர். என் காதலியை என் உள்ளத்தை விட்டு பிரிக்கவே முடியாது என்று கூறுவதை அறிய முடிகிறது.

"பெருநிலம் கிளரினும் திருநில உருவின்
மாயா இயற்கைப் பாவையின்
போதல் ஒல்லாள் என் நெஞ்சத் தானே."

காற்றடித்தாலும் சரி இடி இடித்தாலும் சரி நிலமே நடுங்கினாலும் என்ன துன்பம் ஏற்பட்டாலும் சரி அவன் அழகிய தோற்றத்தை உடையவள் அழியாத இயற்கை வனப்புடைய பதுமை போன்றவள் என் உள்ளத்தை விட்டும் போகமாட்டாள் என்று பல செய்திகளையும் நற்றிணையின் மூலம் ஆண்களின் ஒழுக்கத்தை பழக்கத்தைத் தெளிவாக அறிய முடிகிறது.

**தலைவியின் நம்பிக்கை**

நற்றிணைத் தலைவன் ஒருவன் தலைவியை விட்டுப்பிரியக் கருதியுள்ளதாகத் தோழி அவளிடத்தில் வந்து கூறுகிறாள். அதற்கு மறு மொழியாக அத்தலைவி மொழிந்தது போல, தலைவன் மாறாத சொல்லை உடையவர் என்றும் நிலைத்து விளங்கும் இனிய பண்புகளை உடையவர். எக்காலத்திலும் என்றும் விட்டுப் பிரிந்து போகமாட்டார். தாமரை மலரின் தாது ஊதி உயர்ந்த சந்தன மரத்தில் கட்டிய இனிய தேன்கூடுபொல் உயர்ந்தவரின் உறவுகள் உயர்வு உடையதாகும். நீர் இல்லாமல் உலகு அமையாது போல் அவர் இல்லாமல் நம் வாழ்வு அமையாது ஆகையால் நம்மைக் கைவிடாமல் காப்பார் துன்பம் விளைவிக்கமாட்டார். அப்படி செய்வதையும் பார்க்கமாட்டார் என்பதை,

"நீரின் றமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நந்நயத்து அருளி
நறுநூதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்யறி யலரே"

- (நற்-1. 6-9).

என்ற பாடல் மூலம் தலைவியின் உணர்ச்சியையும் தலைவன் மீது கொண்ட நம்பிக்கையையும் அறிய முடிகிறது.

**முடிவுரை**

நற்றிணையில் பழக்கவழக்கங்களும் மற்றும் நம்பிக்கைகளும், பழக்கங்களும் அறிவும் உணர்வும் வெளிப்படுத்தப்படுகின்ற சூழ்நிலைகளையும், குடும்ப வாழ்வின் ஆளமை பண்பினை பற்றியும் ஆண்களின் பழக்கங்களை மாற்றும் தலைவியின் நம்பிக்கையினையும் இக்கட்டுரையில் சிறப்பாக கூறப்பட்டுள்ளது.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்